# ශ්‍රී ලංකා ආණ්ඩුවේ ගැසට් පත්‍රය
## අති විශෙෂ
# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை
## அதி விசேஷமானது

අංක 14,924/3 — 1970 සැප්තැම්බර් 21 වැනි සඳුදා — 1970.9.21

14,924/3 ம் இலக்கம்—1970 ம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 21 ந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I)—பொது

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்துவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன]

## அரசாங்க அறிவித்தல்கள்

ம.தே.அ.எண் : என். 128/70

### (393 ஆம் அத்தியாயமான) விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டம்

அசோசியேற்றெட் நியூஸ் பேப்பர்ஸ் ஒவ் சிலோன் லிமிறெட் தாபனமும் அதனுடன் தொடர்புபட்ட வேறு கொம்பனிகளும் தனிப்பட்டவர்களும் சம்பந்தமாகக் குறிந்த சில கருமங்கள் பற்றி விசாரணை செய்து அறிக்கை செயவதற்கென, (393 ஆம் அத்தியாயமான) விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் வழங்கப்பட்டதும், 1970 ஒகத்து 5 ஆம் நாள் எனத் தேதியிடப்பட்டதும், 1970 ஒகத்து 5 இன 14,917/4 ஆம் இலக்க அதிவிசேட கசற்றில் வெளியிடப்பட்டதுமான எழுத்தாணையினால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் செயலாளர் பதவியிலிருந்து விலகிவிட்ட முடிக்குரிய வழக்குரைஞர் ஜி. ஆர். ரி. டி. பண்டாரநாயகாவுக்குப் பதிலாக திரு. டி. டபிள்யூ. அபயகோன் அவர்களை 1970 செத்தெம்பர் 9 ம் திகதியிலிருந்து மேற்படி ஆணைக்குழுவின் செயலாளராகச் செயலாற்றும்படி, அதியுத்தமராம் மகாதேசாதிபதி அவர்கள் மேற்சொன்ன சட்டத்தின் 19(1) ஆம் பிரிவின் கீழ் நியமித்துள்ளாரெனப் பொதுமக்கள் தெரிந்துகொள்வதற்கென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

டி. ஜி. தயாரத்ன,
மகாதேசாதிபதியின் செயலாளர்.

மகாதேசாதிபதியின் அலுவலகம்,
கொழும்பு,
1970 செத்தெம்பர் 20.

9–1088

## அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

ச.வ.—பீ. 88/50

### உணவுக் கட்டுப்பாட்டுச் சட்டம் (அத்தியாயம் 171)

சட்டமுறையான பங்கீட்டில் மாற்றம்

1970 செப்டெம்பர் 26 ஆந் தேதியிலிருந்து மறு அறிவித்தல் கொடுக்கப்படும் வரை—

(1) இதனகத்துள்ள அட்டவணையின் I ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் வகுப்பைச் சேர்ந்தவரும் 1952 ஆம் ஆண்டின் உணவுக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகளில் வரைவிலக்கணமிடப்பட்டபடி ஒரு தோட்டத்தில வசிப்பவரும் ஒரு வயதுக்கதிகமானவருமான எந்த ஆளுக்கும் விற்பனை வகையாக அல்லது வேறு வகையாக விற்கப்படக்கூடிய அல்லது வழங்கப்படக்கூடிய ;

அல்லது

(2) இதனகத்துள்ள அட்டவணையின் I ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் வகுப்பைச் சேர்ந்தவரும் பங்கீடு நடைமுறையிலிருக்கும் (தோட்டமொன்றைத் தவிர்ந்த) நகர அல்லது நகரற்ற ஏதேனும் இடப்பரப்பில் வசிப்பவரும் ஒரு வயதுக்கதிகமானவரும் அவ்வகுப்பைச் சேர்ந்த ஓர் ஆளுக்கான அரிசிப் பங்கீட்டுப் புத்தகத்தை வைத்திருப்பவருமாகிய எந்த ஆளுக்கும் விற்பனை வகையாக அல்லது வேறு வகையாக விற்கப்படக்கூடிய அல்லது வழங்கப்படக்கூடிய,

அரிசி அல்லது நெல் வாரப் பங்கீடானது இவ்வட்டவணையின் II ஆம் அல்லது III ஆம் நிரலில் உள்ள குறிப்பிடப்பட்ட நேரொத்த அளவாயிருத்தல் வேண்டுமென 1952 ஆம் ஆண்டின் உணவுக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகளின் ஊ எனும் தலைப்பின் II ஆம் பாகத்தின் 5 ஆம் ஒழுங்குவிதியினதும் ஊ எனும் தலைப்பின் III ஆம் பாகத்தின் 4(1) ஆம் ஒழுங்குவிதியினதும் நியதிகளின்படி இதனால் அறிவிக்கப்படுகின்றது.

சி. ஈ. எச். அமரசேகர,
உணவு ஆணையாளரும் உணவுக் கட்டுப்பாட்டாளரும்.

கொழும்பு,
1970 ம் ஆடு செப்டெம்பர் மீ 20 ந உ.

அட்டவணை

| நிரல் I<br>வகுப்பு | நிரல் II<br>அரிசி இறாத்தலில் | நிரல் III<br>அல்லது நெல் இறாத்தலில் |
|---|---|---|
| குழந்தை | 4 | 8 |
| பிள்ளை | 4 | 8 |
| சாதாரணம் | 4 | 8 |
| வேலையாள் | 4 | 8 |

ஒரு " இறாத்தல் " அல்லது " இரு " என்பது அவோடுபோய் இறாத்தலளவை முறையின் நியம இறாத்தல் எனக் கருதப்படுதல் வேண்டும்.

9–1089


இலங்கை அரசாங்க அழுத்தகத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.